**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**OS.NO.104/2020**

| | | |
|---|---|---|
| **NAME** | : | லலிதா |
| **FATHER NAME** | : | |
| **VILLAGE** | : | |
| **TALUK** | : | |
| **CALLING** | : | |
| **RELIGION** | : | |
| **AGE** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 19.01.2023.**

5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என் மகன் பொன்னுரங்கம்தான் இந்த வழக்கு தயார் செய்ய விவரங்களை வழக்கறிஞரிடம் கூறினார். பொன்னுரங்கம் இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி. வழக்கு விவரம் எனக்கு நேரடியாக தெரியும். நானும் உடன் சென்றேன். என் கணவர் பெயர் சந்திரன். சந்திரன் அப்பா பெயர் ராமசாமி. 1948ல் ராமசாமி கவுண்டர் கிரயம் வாங்கிய சொத்து தாவா சொத்து என்றால் சரி. அவர் மனைவி பெயர் ஜெகதாம்பாள். அவர் 25.02.1953ல் ஜெகதாம்பாளுக்கு செட்டில்மெண்ட் செய்துவிட்டார். பாக்கியம்மாள் என் மாமியாருக்கு மாமியார். பி ஷெட்யூல் சொத்து 1941ல் கிரயம் வாங்கினார்களா என்றால் எப்போது வாங்கினார்கள் என்று தெரியாது. பாக்கியம்மாள், ஜெகதாம்பாளுக்கு சொத்தை செட்டில்மெண்ட் செய்துவிட்டார் என்றால் சரி. ராமசாமி கவுண்டரும் கண்ண்பப கவுண்டரும் அண்ணன் தம்பிகள். அவர்கள் இருவரும் சொத்தை 15.03.1948ல் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் சரி. அந்த பாகப்பிரிவினை ராமசாமிக்கு ஏ ஷெட்யூல் சொத்தும் கண்ணப்ப கவுண்டருக்கு பி ஷெட்யூல் சொத்தும் ஒதுக்கினார்கள் என்றால் சரி. ராமசாமி கவுண்டர் அந்த சொத்தை ஜெகதாம்பாளுக்கு செட்டில்மெண்ட் செய்தார் என்றால் சரி. ஏ ஷெட்யூல் மொத்தமுமே ஜெகதாம்பாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரி. அவர்கள் 06.10.1997ல் ஒரு உயில் எழுதினார்கள் என்றால் சரி. ஈஸ்வரியும் மீராபாயும் அந்த சொத்துக்களையெல்லாம் அடைய வேண்டும் என்று உயில் எழுதினார்கள் என்றால் சரி. ஜெகதாம்பாள் 1998ல் இறந்துவிட்டார் என்றால் சரி. அதன்படி ஈஸ்வரிக்கும் மீராபாய்க்கும் அந்த சொத்து சேர்ந்துவிட்டது என்றால் சரி. மீராபாயையும் ஈஸ்வரியையும் இந்த வழக்கில்

1,2 பிரதிவாதிகளாக சேர்த்துள்ளேன் என்றால் சரி. மீராபாய், ஈஸ்வரி ஆகிய 2 பேரை சேர்ந்து லிக்மிசந்த், உத்தம்சந்திற்கு 2007ல் கிரயம் செய்துவிட்டார்கள் என்றால் சரி. 24.07.1997ல் கண்ணப்ப கவுண்டர் அவரது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் உயில் எழுதிவிட்டார் என்றால் சரி. அவர் இறந்துவிட்டார், அந்த உயில்படி அவரது மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் அந்த சொத்து சேர்ந்துவிட்டது என்றால் சரி. அவர்கள் லிக்மிசந்த், உத்தம்சந்திற்கு 2007ல் கிரயம் செய்துவிட்டார்கள் என்றால் சரி. முழு சொத்தும் அந்த லிக்மிசந்த்திற்கும், உத்தம்சந்திற்கும் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரி. 2007ல் கிரயம் செய்தது தெரியும். நான் கொடுப்பார்கள் என்று அமைதியாக இருந்தேன். அந்த 2 பேரையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரி. லிக்மிசந்த், உத்தம்சந்த் ஆகிய இருவரும் சேர்ந்து 26.04.2011ல் ஜவாதிலால் என்பவருக்கு கிரயம் செய்ய பொது அதிகாரம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரி. அந்த ஜவாரிலாலை நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. இந்த விஷயமும் 2011ல் கிரயம் செய்தது தெரியும். கொடுப்பார்கள் என்று இருந்தேன். 20.05.2011ல் எஸ் எஸ் கோல்ட் லேண்ட் ஹோட்டல்ஸ் பிரைவேட் லிமிடெட் என்பவருக்கு கிரயம் செய்துவிட்டார்கள் என்றால் ஆமாம். பட்டா எல்லாம் அந்த ஹோட்டல் பெயரில் மாறியது தெரியும். நான் நேரில் பார்க்கவில்லை. 2017ல் அறிவிப்பு கொடுத்தேன். அவர்கள் பதில் கொடுத்தார்களா என்றால் இல்லை. இந்த கோல்ட் லேண்ட் ஹோட்டல் பிரைவேட் லிமிடெட்டை நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. அவர்கள் மறுபடியும் 26.10.2015ல் பியர்ல் ஹியூமன் கேர் பிரைவேட் லிமிடெட்டிற்கு கிரயம் செய்துவிட்டார்கள் என்றால் சரி. அவர்களையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. அவர்கள் பெயரில் இன்றைய தேதிவரை பட்டா உள்ளது என்றால் சரி. அவர்களிடம்தான் சுவாதீனம் இருக்கிறது என்றால் சரி. அந்த பியர்ல் ஹியூமன் கேர் பிரைவேட் லிமிடெட்டும் சாண்ட்கோ பவுண்டேஷனுக்கு 30.03.2017ல் கிரயம் செய்துவிட்டார்கள் என்றால் ஆமாம். அவர்களையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை. தாவா இடத்தில் தற்போது பில்டிங் உள்ளது. சாண்ட்கோ பவுண்டேஷன் அந்த இடத்தில் நறுவி மருத்துவமனை கட்டியுள்ளார்கள் என்றால் ஆமாம். அந்த இடத்தில் நான் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரிதான். சுவாதீனமே இல்லாத சொத்தில் கூட்டுச் சுவாதீனம் உள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தெரியாது. நான் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாக சொல்லி நீதிமன்றக் கட்டணம் செலுத்தியுள்ளதால் நான் செலுத்தியுள்ள நீதிமன்றக் கட்டணம் சரியல்ல என்றால் சரியல்ல. வழக்கிற்குண்டான நீதிமன்றக் கட்டணம் சரியாக செலுத்தாத காரணத்தால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கில் தேவையான

தரப்பினர்களை சேர்க்காத காரணத்தால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் இந்த பிராதில் 3ம் பிரதிவாதி ஒரு வழக்கறிஞரிடம் அழைத்துச் சென்றதாகவும் என் மகன் என்னை ஏமாற்றியதாகவும் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி வழக்கறிஞரிடம் கூட்டிச்செல்வதாக சொல்லி ஏமாற்றியதாக இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் உயில் மற்றும் கிரயங்கள் எல்லாம் தெரிந்தும் அவற்றை மறைத்து பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு காலம் தாழ்த்தி போட்டுள்ளதாலும், உரிமையில்லாத இடத்தில் உரிமை கேட்டு போட்டுள்ளதாலும் வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

<u>2ம் பிரதிவாதி தரப்பில் 5ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.</u>

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.